Federation of Tamil Sangams North America
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
SINCE 1988

இலையுதிர் மலர்

அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி / அக்டோபர் 2024

பேரவை விழா 2024

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
FEDERATION OF TAMIL SANGAMS OF NORTH AMERICA (FeTNA)
A Registered Non-Profit, Tax exempt 501(C)(3) Organization
2024-26
புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கு மனமார்ந்த
வாழ்த்துகள்
விஜய் மணிவேல்
VIJAY MANIVEL
தலைவர் I President
எழிலன் ராமராஜன்
EZHILAN RAMARAJAN
துணைத் தலைவர் I Vice President
கபிலன் வெள்ளையா
KABILAN VELLIYA
செயலாளர் I Secretary
ஜான்சிராணி பிரபாகரன்
JANSIRANI PRABAKARAN
இணைச்செயலாளர் I Joint Secretary
வள்ளிக்கண்ணன் மருதப்பன்
VALLIKKANNAN MARUTHAPPAN
பொருளாளர் I Treasurer
சுபா சுந்தரலிங்கம்
SUBA SUNTHARALINGAM
துணைப்பொருளாளர் I Asst. Treasurer
பாரதி பாண்டி
BHARATHI PANDI
இயக்குநர் I Director
கார்த்திக் பெருமாள்
KARTHIK PERUMAL
இயக்குநர் I Director
ஷான் குத்தாலிங்கம்
SHAN KUTHALINGAM
இயக்குநர் I Director
வெற்றிவேல் பெரியய்யா
VETRIVEL PERIYAIYAH
இயக்குநர் I Director
பாலா சுவாமிநாதன்
BALA SWAMINATHAN
முன்னாள் தலைவர் I Ex-Officio Board Member
ஆர்த்திகா குமரேஷ்
AARTHIKA KUMARESH
இளையோர் உறுப்பினர் I Youth Member
ரோஷன் சீனிவாசன்
ROSHAN SRINIVASAN
இளையோர் உறுப்பினர் I Youth Member
www.fetna.org

பேரவைத்தலைவர் மடல்

வட அமெரிக்கத் தமிழர்களின்பாலும் நம் தாய்மொழியாம் தமிழின்பாலும் நாட்டம் கொண்டு பேரவையுடன் இயைந்து செயற்பட்டு வருகின்ற நல்லுள்ளங்கள் அனைவருக்கும் வணக்கம். பேரவை விழாவில் கணிசமானோரைச் சந்தித்து இருந்தாலும் கூட, மற்றோருடனும் அளவளாவ இத்தகைய மடல்களும் இணையவழிக் கூட்டங்கள்வாய்ப்பாக அமைகின்றன. அவற்றினூடாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

நேற்று போல இருக்கின்றது. ஆனால் பேரவை விழா முடிந்து மூன்று மாதங்கள் கடந்தோடி விட்டன. புதிய செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டும்தான். அதன்நிமித்தம் பொறுப்புமாற்றப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுப் பெரும்பாலான பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. தொடர்ந்து, குழுக்கள் அமைக்கும் பணிகளிலும் முதற்கட்டமாக 12 குழுக்களுக்கான பணிகள் நிறைவுற்றுச் செயற்குழுவின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன. அடுத்தகட்டக் குழுக்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. எல்லாத் தமிழ்ச்சங்கங்களும் தமிழார்வலர்களும் குழுக்களில் இணைந்து செயலாற்ற வரவேற்கின்றோம்.

அமெரிக்க மண்ணுக்கு இந்தியப் பிரதமர் அவர்களும் தமிழ்நாட்டு முதல்வர் அவர்களும் வருகை புரிந்ததன்பொருட்டு, அவர்களை வரவேற்றுச் சிறப்புச் செய்வதில் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் ஈடுபடுத்திக் கொண்டது. முறையே, நியூயார்க், சிகாகோ நகர்களுக்குச் செயற்குழுவினர் சென்று வரவேற்புச் செய்தனர். இவையெல்லாம் பேரவைக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச்சமூகத்துக்கும் மேன்மையை ஈட்டிக் கொடுக்குமென்பதில் நம்பிக்கை கொள்கின்றோம். தமிழ்க்கல்வி, தமிழ்க்கலை, மொழி, பண்பாடு, தமிழர்நலம், உரிமைகள் போற்றுவதற்கு, பலதரப்பட்ட அரசுகளுடனும் நாம் இயைந்து பணியாற்றும் போது வாய்ப்புகளும் பேறுகளும் கிடைக்கப் பெறுமென்பதில் ஐயமில்லை.

சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்றுச் செயலாற்றிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன். கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற கூட்டத்தில், கிட்டத்தட்ட கலந்துகொண்ட எல்லாருமே கடைசிவரையிலும் இருந்தமை எங்களுக்கான ஊக்கமாக அமைந்தது. இனிவரும்காலங்களில் இன்னும் கூடுதலான பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

2024 அருவி இளவேனில் மலரில், பேரவையின் நிறுவனத் தலைவர்களுள் ஒருவரும் வாழ்நாள் உறுப்பினருமான முனைவர் தணி சேரன் அவர்கள் குறித்து, உண்மைக்குப் புறம்பான செய்தி இடம் பெற்றிருப்பதாக அறிய நேரிட்டது. செயற்குழுவின் சார்பில் வருத்தம் தெரிவித்தும் அப்படியான படைப்பினை நீக்குவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இனிவரும் காலங்களில், ஆசிரியர்குழு கவனத்துடன் செயற்பட புதுச்செயற்குழு சூளுரைத்துரைக்கின்றதென்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவை விழா-2025, முதற்கட்டப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை நிறைவுற்றதும், குழுக்கள் அமைக்கும் பணிகள் துவக்கப்படும். உடனுக்குடன் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அனைவரும் தொடர்பில் இருந்து, பேரவைப் பணிகளைச் சிறக்கச் செய்வோம். வாழ்க தமிழ்!

விஜய் மணிவேல்,

தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

பேரவைச் செயலாளர் மடல்

வட அமெரிக்கத் தமிழர்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கங்கள். வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் செயற்குழுவின் சார்பாக உங்களுடன் அளவளாவுவதில் மகிழ்கின்றேன்.

புதுச்செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், செயற்குழுக் கூட்ட அலுவல்களை உடனுக்குடன் பொதுக்குழு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதென முடிவு செய்து, அவ்வண்ணமே பகிர்ந்து கொண்டு வருகின்றோம். அன்புகூர்ந்து அவற்றினை அவ்வப்போது படித்து உள்வாங்கி, எடுக்கப்படும் முன்னெடுப்புகளுக்கு நல்லாதரவினை வழங்குமாறும், ஆலோசனைகள், வினாக்கள் இருப்பின் உடனுக்குடன் தொடர்பு கொள்ளுமாறும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தமிழ்ச்சங்க நிர்வாகிகள், தமிழ்ச்சங்கம் சார்ந்த தகவல்கள், பேராளர்கள் முதலான தகவல்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் சரி செய்து கொள்ளவும், பேரவை குறித்த கருத்துகள், யோசனைகள், பரிந்துரைகள் முதலானவற்றுக்கு எப்போதும் போல பேரவைச் செயலாளரை அணுக வேண்டுகின்றோம்.

செப்டம்பர் 13, 2024 அன்று இடம்பெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பங்களித்தோர் அனைவருக்கும் நன்றி. அதன்போது பகிர்ந்து கொண்ட கருத்துகள், செயற்குழுவுக்குப் பெரிதும் உதவியாக உள்ளன. அவற்றின்பால் முன்னெடுக்கப்படும் பணிகள் குறித்து, அவ்வப்போது செயற்குழுக் கூட்ட அறிக்கையின்வாயிலாக அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

பொறுப்புமாற்றுப் பணிகளில் செயற்குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாலும், தரவுகள் சீரமைப்பதற்கும் அவற்றை ஆய்ந்து கடந்தகால அலுவல்களை அறிந்து கொள்வதில் செயற்பட்டுக் கொண்டிருந்ததாலும் இந்த மூன்று மாதகாலமும் சட்டென ஓடிப் போனதைப் போல் உணர்கின்றோம். அவையெல்லாம் இனிவரும் காலங்களில் செயற்படுவதற்கு உதவியாய் அமையுமென்பது திண்ணம்.

இருக்கின்ற எல்லாத் தமிழ்ச்சங்கத்தினரும் பேரவைக்குழுக்களில் இணைந்து பணியாற்ற வேண்டுமென்பதே செயற்குழுவின் விருப்பமாய் இருக்கின்றது. பேரவை என்பது நமக்கானது. நாம் எல்லாரும் பங்களிப்புச் செய்தால்தான் நமக்கான உரிமைகள் பிறக்கும். அவை தொடரவும் செய்யும். ஆகவே குழுக்களுக்கான அவ்வப்போதைய அறிவிப்புகளை தாங்கள் தங்கள் சக தமிழ்ச்சங்க உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.

கலை இலக்கியக் கூட்டம், அருவி இதழ் முதலானவற்றுக்கான குழுக்கள் அமைக்கும் பணி தொடர்ந்து கொண்டிருந்ததாலே, தற்காலிகமாய் அவற்றுக்கான பணிகளைச் செயற்குழுவினரேவும் செய்ய விழைந்து செம்மையாய்ச் செயலாற்றியும் உள்ளனர். அவர்களுக்குப் பாராட்டுகளையும் நன்றிகளையும் செயலர் என்கின்ற முறையில் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழிய தமிழர்நலம், வளர்க பேரவை!

கபிலன் வெள்ளையா,

செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

பொருளாளர் மடல்

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை ஆர்வலர்களுக்கு வணக்கம். 2024-2026 ஆம் ஆண்டுக்கான பொருளாளர் பொறுப்பேற்றுக் கொண்டபின், இம்மடலின் வாயிலாகத் தங்களுடன் தொடர்புகொள்வதை எனது கடமையாகக் கருதுகிறேன். பேரவையின் புதிய பொருளாளருக்கு, அனைத்து நிதி தொடர்பான பொறுப்புகளை மாற்றுவதென்பது ஒரு நிர்வாகச் செயல்பாட்டின் தேவை. அத்தகைய பொறுப்பு மாற்றம் என்பது, நிர்வாகத்தைச் சீருடன் நடத்த வேண்டுமென்பதற்கான, மிகக் குறுகிய காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டுமென்பது எழுதப்படாத விதி. இந்தமுறை அமெரிக்கக் குடியுரிமை இல்லாத ஒரு கனடியத் தமிழரை, இப்பொறுப்புக்கு அவர்மீது நம்பிக்கை வைத்து தேர்தல்வழியாக வாய்ப்பு வழங்கி இருக்கின்றது பேரவைப் பொதுக்குழு. ஆனால் பேரவையின் நலத்திற்கு ஏதுவாக இல்லாதபடிக்கு, நிர்வாகத்திற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் பொய்யான பரப்புரைகளும் இடர்பாடுகளும் இடம் பெற்று வந்தன. இவை அனைத்தையும் பொய்யாக்கி, அமெரிக்க அரசாங்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, ஒரு கனடியத் தமிழராக இருந்தும், பேரவை வரலாற்றில் இதுகாறும் இல்லாதபடிக்கு, 40 நாட்களுக்குள் அனைத்து வங்கிப் பொறுப்புகளையும் ஏற்று முழு செயற்பாட்டுடன் பயணிக்கிறேன் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவிக்கிறேன். உள்நோக்கமனப்பாங்குடன் செயற்பட்டோருக்கும் ஐயம் கொண்டிருந்தோருக்கும் தீர்க்கமான ஒரு தெளிவு கிடைத்திருக்குமென நம்புகிறேன். இந்தப் பொறுப்பு மாற்றத்திற்குத் துணைநின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள் பலப்பல.

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்பது வள்ளுவன் குறள். பேரவைக்கு பொருள் ஈட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே, அப்பொருளைத் திட்டமிட்டு செலவுச் செய்தும் எஞ்சிய பொருளை பேணிகாப்பதும் அறமாகும். கடந்த சில ஆண்டுகளாக பேரவையின் மாநாடுகள் மிகவும் அதிக பொருட்செலவுடன் பெரிய அளவில் இடம் பெற்றது மகிழ்ச்சியே. வரும் காலங்களில் இந்த மாநாடுகளின் நோக்கம், மொழி, கலாச்சாரம், வாழ்வியல், இளையோர் முன்னேற்றம் என வரையறுக்கப்பட்டு, அதற்கான தேவைகளின் முக்கியத்துவம் கருதிப் பொருள்களை அறத்துடன் செலவு செய்து மாநாட்டின் வெற்றியினைப் பறைசாற்றவேண்டும்.

பேரவையின் பொது நிர்வாக செலவுகள், ஆண்டிற்கு சுமார் $60,000-$75,000 வரை ஏற்படுகிறது. இந்தச் செலவினைச் செவ்வனே செலவு செய்து, கட்டுக்குள் கொண்டு வருவது எனது எண்ணம். இதற்காகக் கூடுதல் வரவுகளை எப்படி ஏற்படுத்தலாமென்பதற்கான வரைவுகளின்பாற்பட்டுச் செயற்படத் திட்டமிட்டுள்ளேன்.

செப்டம்பர் 13ஆம் நாள் நடந்து முடிந்த சிறப்புப் பொதுக்கூட்டத்தில் தெரிவித்தபடி, பேரவையின் வைப்புநிதி சுமார் $1.48 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது. புதிய பொருளாளராகப் பேரவையின் நிதிநிலை அறிக்கையை வெளிப்படையாகவும் அறத்துடன் உங்களுடன் ஒவ்வொரு காலாண்டிலும் பகிர்ந்து கொள்வேனென்றும் உறுதியளிக்கிறேன்.

நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த வழக்கொன்று முடிவிற்கு வந்திருப்பதாலும் பலவிமர்சனங்களுக்கு உட்பட்டதாலும், அதனுடைய பொருட்செலவுகளைப் பொதுவெளியில் பகிர்ந்துகொள்வது முக்கியமெனக் கருதுகிறேன். இந்த வழக்கிற்காக பேரவை $56,135 அமெரிக்க டாலர்கள் செலவு செய்துள்ளது. இந்தக் கட்டணத்தில் சுமார் $34,119 அமெரிக்க டாலர்கள் தனிநபர் கணக்கிற்குச் செலுத்தப்பட்டிருப்பதையும், $4500 அமெரிக்க டாலர்களென அடுத்தடுத்துப் பல தவணைகளாக வழக்கறிஞர் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருப்பதையும், சிறப்புக் கூட்டத்தில் பலர் கேள்விக்குள்ளாக்கி இருந்தனர். அதைத் தொடர்ந்து சில மின்னஞ்சல்களும் வந்துள்ளன. ஆகையால் இந்தப் பிரச்சனையை எப்படிக் கையாள்வதென்பதைச் செயற்குழுவின் முடிவுக்கு விடப்பட்டு உள்ளது.

பேரவையின் பொருளாளர் இடைநிலை அறிக்கையைப் பகிர்ந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி. என்றென்றும் உங்கள் ஆதரவுடன், சிறப்புடன் பணிசெய்யக் காத்திருக்கிறேன். கேள்விகள் இருப்பின் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். நன்றி.

வள்ளிக்கண்ணன் மருதப்பன்

பொருளாளர், செப் 30, 2024.

மாண்பமைத் தலைவர்கள் வரவேற்பு

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க" எனும் வள்ளுவத்துக்கொப்ப, பிறகு பார்த்துக் கொள்ளலாமென எண்ணாமல், பேரவைப் பணிகளில் நாட்டம் கொண்டு தன்னார்வப் பணி செய்து வருவோர்க்கும், குழுக்களில் சேர்ந்து பணியாற்ற விரும்பி விண்ணப்பித் தோருக்கும் மிக்க நன்றி. குழு அமைப்புப் பணிகள் முழு வீச்சில் இடம் பெற்று வருகின்றன.

இந்தியப் பிரதமர் வருகை

குவாட் உச்சிமாநாட்டுக்கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்காவுக்கு வருகையளித்திருந்த மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர், திரு. நரேந்திர மோடி அவர்கள் கலந்து கொண்ட சமூக வரவேற்பு, கலைப் பண்பாட்டு விழா, நியூயார்க் பெருநகரில் செப்டம்பர் 22, 2024 ஆம் நாள் இடம் பெற்றது.

- வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு, பேரவை வாயிலாக விழாவுக்குப் பதிவு செய்திருந்தோருக்கு சிறப்பு வரிசையில் அமர இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தன.

- காலை நேரத்தில் இடம் பெற்ற மாண்புமிகு இந்திய அயலகத்துறை அமைச்சர் முனைவர். S. ஜெய்ஷங்கர் அவர்களுடனான கலந்துரையாடற்கூட்டத்திலும் பேரவைக்குழுவினர் விழாக்குழுவினரின் முன்னழைப்பின் பெயரில் கலந்துகொண்டனர்.
- இந்தியத் தூதரக அலுவலர்கள், அமைச்சரக அலுவலர்களுக்கு பேரவைச்செயற்குழு வினர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, தொடர்புகளுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பிற்பகலில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்ட பண்பாட்டு விழாவில், சிறப்பு இருக்கைகள் அளிக்கப்பட்டு, பிரதமருக்கு செயற்குழுவினர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

PROGRESS TOGETHER



226
227
228
229

- பிரதமர் அவர்களை வரவேற்பதில் தங்கள் மகிழ்வையும், உலகெங்கும் அவரது முயற்சியால் நிறுவப்படவுள்ள "திருவள்ளுவர் பண்பாட்டு மையங்களுக்கு" தங்களது நன்றிகளையும் செயற்குழுவினர் தெரிவித்துக் கொண்டனர்.
- அயலக மண்ணில் ஆற்றிவரும் சமூகப்பணிகளுக்குத் தம் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் வாழ்த்துரைக்க, பேரவைச் செயற்குழுவினருடன் நிழற்படமும் எடுத்துக் கொள்ளப்பட்டது.
- தமிழ்ச்சமூகத்துக்கான பணிகளை மென்மேலும் வளர்த்துக் கொள்ள இணைந்து பணியாற்றுவோமென அமைச்சரக அலுவலர்கள் பேரவைச் செயற்குழுவினரிடம் நம்பிக்கை தெரிவித்துக் கொண்டனர்.
- விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்தும், பேரவையினருக்கு வாய்ப்பளித்துச் சிறப்பளித்தும், பேரவைக்குழுவினரை "தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்" களாக அங்கீகரித்தும் நிகழ்ச்சிக்கு வரவேற்ற, இந்திய அமெரிக்கர் சமூக அமைப்பின் (IACU) விழாக்குழுத்தலைவர் மரு. பரத் பராய் அவர்களைச் சந்தித்து, பேரவைத்தலைவர் நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, பேரவைப் பணிகளுக்கும் ஆதரவளிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தமிழ்நாட்டு முதல்வர் வருகை

தமிழ்நாட்டுக்கான தொழில்வளங்களை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவுக்கு வருகை புரிந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர், திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை, செப்டம்பர் இரண்டாம்2ம் நாள் பேரவைத்தலைவரும் துணைத்தலைவரும் சிகாகோ விமானநிலையம் சென்று வரவேற்றனர்

செப்டம்பர் ஏழாம் நாள் இடம் பெற்ற, அயலகத் தமிழர் நலன் வாரியத்தின் கலைவிழா விலும் பேரவைச் செயற்குழுவினர் பங்கேற்று, தமிழக முதல்வர் அவர்களுக்கு பேரவை விழாவுக்கான அழைப்பினைக் கையளித்தும் நினைவுப்பரிசுகள் அளித்தும் சிறப்புச் செய்தனர்.

பேரவை விழா 2024

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 2024ஆம் ஆண்டுக்கான ஆண்டுவிழா டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சேன் ஆண்டோனியோ நகரில் கோலாகலமாக இடம் பெற்றது. விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் பி.டி.ஆர்.பழநிவேல்ராஜன், மா.சுப்ரமணியன், சென்னை மாமன்றத் தலைவர் வணக்கத்துக்குரிய பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. வேல்முருகன், ஆளூர் ஷாநவாஸ், அற்புதம் அம்மாள், திரைப்படக் கலைஞர் சூரி, தமிழ் ஆளுமைகள் கு.ஞானசம்பந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தமிழ் கலை, இலக்கியம், பண்பாடு சார்ந்த பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

FeTNA AV PARTNER
FeTNA AV PARTNER

மிசௌரி தமிழ்ச்சங்கம்
Tamil Sangam of Missouri
www.MissouriTamilSangam.org

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்
Tamil Sangam of Greater Washington Inc.
யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
www.tsgwdc.org

SILVER PARTNERS
PROFIT.CO

பேரவை விழா 2024

©KarthiS

அன்புடை நெஞ்சம்

அமெரிக்கா, கனடாவில் வாழும் தமிழ்க்குடும்பங்கள், தங்கள் இளையோருக்கு இணையரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உதவிட பேரவையின் முன்னெடுப்பாக 'பேரவையின் அன்புடை நெஞ்சம் இணையதளம் (FeTNA Matrimony registration) இயங்கி வருகின்றது.

https://fetna-anbudainenjam.org/search/

இந்த நல்லதொரு செய்தியைத் தங்களின் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், நண்பர்கள், உற்றார் உறவினருடன் பகிர்ந்துகொள்ளுமாறு பேரவையின் குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது. நமது இளைய தலைமுறையின் நலனே நம் நலனும், மகிழ்வும் ஆகும். எனவே, இந்த இணையதளத்தினை மேலும் பல வட அமெரிக்கவாழ் தமிழ்க்குடும்பங்கள் பெருமளவில் பயன்படுத்திப் பயனடையச் செய்யும் பணியில் உங்கள் அனைவரின் அன்பான ஆதரவுக்கு, பேரவையின் நன்றிகள் பல.

நியூசெர்சி தமிழ்ப்பேரவை கோடைவிழா

வெப்பக் காற்றும் வியர்வைத் துளிகளும் ஒருசேர பயணிக்கும் கோடைக்காலத்தில், மனதைக் குளிர்விக்கும் விழாக்கள் நடைபெறுவது என்பது மகிழ்ச்சி தரக்கூடியது மட்டுமல்ல, மலைக்கவைக்கக் கூடியதுமாகும். அதுவும் அமெரிக்க மண்ணில் வாழும் தமிழர்கள் கொண்டாடும் விழா என்றால் சொல்லவே வேண்டியதில்லை. அப்படியான அழகு நிறைந்த, அருமை மிகுந்த கோடை விழாவை, இந்த ஆண்டும் நியூசெர்சி தமிழ்ப் பேரவை நடத்திக் காட்டியுள்ளது.

ஆகஸ்ட் 17 அன்று பிரிட்ச்வாட்டர் நகரில் உள்ள டியூக் ஐலேண்ட் பூங்காவில் (*Duke Island Park*) ஆறாவது கோடைவிழா சிறப்பாக நடைபெற்றது. அன்று வானிலை மேகமூட்டத்துடன் காணப்பட்டது என்றாலும், அதைப் பொருட்படுத்தாது காலை 11 மணிக்கே அவ்விடத்துக்குச் சென்ற நம் நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அன்றைய நிகழ்வுக்கான திட்டங்களை வகுத்து வரைமுறைப்படுத்தினர். பின்னர், நிகழ்வைக் காணவந்த குழந்தைகளையும் பெரியவர்களையும் வரவேற்றனர். நிகழ்வுக்கு 200 பேர் வரிந்து கட்டிக்கொண்டு வந்திருந்த நிலையில், அவர்களுக்கு மோர், நன்னாரி சர்பத் ஆகியவற்றை வழங்கி நமது செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் தாகம் தணித்தனர். மேலும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டது. இந்த முறை கோடை விழாவில், இளைய தலைமுறை குழந்தைகள் அமெரிக்கன் ஹார்ட்ஸ் அசோசியேசனுக்காக நிதி திரட்டினர்.

சுவையான மதிய உணவாக தோசா கிரில் உணவகம் (*Dosa Grill*) சார்பில் தோசைகள் சுடச்சுட தயாரிக்கப்பட்டு வந்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த உணவு விருந்தில் 10 வகையான தோசைகள் வழங்கப்பட்டன. உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உறக்கத்தைத் தரும் என்பதால், அதிலிருந்து விடுபட, கார்டன் ஸ்டேட் சீட்டா குழுவினர், குழந்தைகள்

மற்றும் பெரியவர்கள் என அங்கிருந்த அனைவரையும் அழைத்துக்கொண்டு அந்தப் பூங்காவையே ஒரு வட்டமடித்து வருவதற்கு சிறு நடைப்பயணத்தை ஏற்பாடு செய்தனர். அது அவர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது.

அதைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்ட விளையாட்டுகளில் அனைவரும் கலந்துகொண்டனர். கோலி, உரி அடி, கைப்பந்து, பாம்பரம், எலுமிச்சை கரண்டி, பல்லாங்குழி, தடங்கல், பரமபதம் உள்ளிட்ட விளையாட்டுகளில் அனைவரும் கலந்துகொண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. குறிப்பாக, பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையிலான கயிறு இழுத்தல் போட்டி பார்ப்போரைப் பரவசம் கொள்ளச் செய்தது. இந்நிகழ்வின் மற்றுமொரு சிறப்பம்சமாக சூம்பா (Zumba) பயிற்சியாளர் ஸ்ரீவித்யாவின் சூம்பா பயிற்சி இடம்பெற்றது. அவர் காட்டிய பயிற்சியில், பார்வையாளர்களும் அவருடன் இணைந்தனர். நியூசெர்சி தமிழ்ப் பேரவை சார்பில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்த சூம்பா நடனத்தில், முதல்முறையாக தமிழ்த் திரையிசைப் பாடல்களுக்கு சூம்பா நடனம் அமைக்கப்பட்டது. இதற்கு முன்பு ஸ்பானிஷ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மட்டுமே நடனம் இருந்து வந்தது. நியூசெர்சி தமிழ்ப் பேரவை கேட்டுக்கொண்டதையடுத்து இந்த முறை, தமிழ்த் திரையிசைப் பாடல்களுக்கு நடனம் அமைக்கப்பட்டது நிகழ்வுக்கு மேலும் சிறப்பு சேர்த்தது.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பொருளாளர் திரு. வல்லிகண்ணன் வருகை தந்து நிகழ்வுகளை முழுவதுமாகப் பார்த்து ரசித்தார். அவரை நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் இயக்குநர்கள் குழு உறுப்பினரும் வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப்

பேரவையின் செயலாளரும் ஆன திரு. கபிலன் வெள்ளையா அவர்கள் கௌரவித்தார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய அவர், நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் இந்த நிகழ்வை வாழ்த்திப் பேசினார். குறிப்பாக, இதைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த தலைவர் திருமிகு. சிறிலெட்சுமி கல்யாணசுந்தரம் மற்றும் துணைத் தலைவர் திரு உதயக்குமார் கிருட்டிணமூர்த்தி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். பின்னர் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் செயற்குழு உறுப்பினர்களுக்கு பதக்கங்கள் வழங்கிப் பாராட்டினார். தவிர, பொதுக்குழு உறுப்பினர்களுக்குச் சால்வைகள் அணிவித்து மகிழ்வித்தார். நிகழ்வுக்குப் பின்னர், அந்தக் கோடைவிழாவைக் கண்டுகளித்த பலரும் தங்களது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். ஓர் அற்புதமான பொழுதைக் கழித்ததாகக் கூறிய அவர்கள் அனைவரும், ஒவ்வோர் ஆண்டும் இக்கோடை விழாவைத் தவறாமல் நடத்த வேண்டும் என அன்புக் கட்டளையிட்டனர். அனைவருக்கும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்த இந்தக் கோடை விழாவை, இயக்குநர்கள் குழுவின் வழிகாட்டுதலுடன் நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றாய் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ■

வளைகுடாப் பகுதித் தமிழ்மன்றத்தின் நிகழ்வு

SFBATM ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, தமிழ் மன்றம் தனது முதல் ஹாஃப் மாரத்தான், *15K, 10K*, மற்றும் *5K* ஓட்டம்/நடையை அறிமுகப்படுத்தியதால் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறித்தது. இந்த நிகழ்வானது சமூக உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களை ஆரோக்கியம், உடற்பயிற்சி மற்றும் தோழமைக்கான ஒரு நாளுக்காக ஒருங்கிணைத்து, ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கண்டது. கொண்டாட்டம் மற்றும் சாதனை நாள் பங்கேற்பாளர்கள் உற்சாகத்துடன் கூடிய நிகழ்ச்சி அதிகாலையில் தொடங்கியது. அனுபவம் வாய்ந்த ஓட்டப்பந்தய வீரர்கள் முதல் சாதாரணமாக நடப்பவர்கள் வரை, *TVNO'24* இன் உள்ளடங்கிய தன்மை இந்த மறக்கமுடியாத நிகழ்வில் அனைவரும் பங்கேற்க முடியும் என்பதை உறுதி செய்தது.

சமூக ஒத்துழைப்பு TVNO'24:

பல்வேறு ஸ்பான்சர்கள் மற்றும் சமூகப் பங்காளிகளின் தாராளமான ஆதரவால் சாத்தியமானது. *Profit.co*, தலைப்பு ஸ்பான்சர், நிகழ்வை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகித்தது. *Aappakadai USA*, உணவு ஸ்பான்சர், பங்கேற்பாளர்கள் சுவையான உணவுகளுடன் நன்கு ஊட்டமளிக்கப்படுவதை உறுதி செய்தார். *SEEEDS, CIF, SKYYOGA, UPF, ATEA, AiA* மற்றும் *Sports Basement* போன்ற சமூகப் பங்காளிகள் நிகழ்வின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர். ஸ்போர்ட்ஸ் பேஸ்மென்ட், குறிப்பாக, ஒரு சமூகப் பங்காளியாக இணைந்து, பங்கேற்பாளர்களுக்கு *20%* தள்ளுபடியை வழங்கியதுடன், சிறந்த ஓட்டப்பந்தய வீரர்களை சிறப்புப் பாராட்டுக்களுடன் கௌரவித்தது. இந்த கூட்டாண்மை *TVNO'24* ஐ இயக்கிய சமூக உணர்வையும்கூட்டுமுயற்சியையும்எடுத்துக்காட்டுகிறது.

பங்கேற்பாளர்களை கௌரவித்தல்:

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக விருது வழங்கும் விழா நடைபெற்றது, அங்கு சிறந்த ஓட்டப்பந்தய வீரர்கள் அவர்களின் சிறப்பான செயல்திறனுக்காக அங்கீகரிக்கப்பட்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு அவர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும்

சாதனையை உணர்த்தும் வகையில் பதக்கங்கள் வழங்கப்பட்டன. பங்கேற்பாளர்களும் பார்வையாளர்களும் ஒன்றாகக் கொண்டாடியதால் மகிழ்ச்சியும் பெருமையும் வெளிப்பட்டது.

TVNO'24 இன் வெற்றி *SFBATM* ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக நிகழ்வுகளுக்கு ஒரு புதிய முன்னுதாரணத்தை அமைத்துள்ளது. இது கூட்டு முயற்சியின் ஆற்றலையும், சமூகத்தில் ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதற்கான நேர்மறையான தாக்கத்தையும் வெளிப்படுத்தியது. அமோகமான பதில் மற்றும் நேர்மறையான பின்னூட்டத்துடன், அடுத்த ஆண்டு நிகழ்விற்கான திட்டங்கள் ஏற்கனவே நடந்து வருகின்றன, இது பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் இன்னும் பெரிய மற்றும் சிறந்த அனுபவத்தை உறுதியளிக்கிறது.

தமிழ் வெற்றி நடை ஓடை (*TVNO'24*) ஒரு சமூகம், ஆரோக்கியம் மற்றும் விடாமுயற்சியின் கொண்டாட்டம். நீங்கள் ஆர்வமுள்ள ஓட்டப்பந்தய வீரராக இருந்தாலும் அல்லது உங்கள் வாழ்க்கை முறையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் ஒருவராக இருந்தாலும், இந்த நிகழ்வு உங்களை வரவேற்கிறது. அடுத்த பதிப்பிற்கு உங்கள் காலெண்டர்களைக் குறிக்கவும், மேலும் இந்த வரலாற்று இயக்கத்தின் ஒரு பகுதியாக இருங்கள். இந்த நிகழ்வைத் தவறவிட்டவர்களுக்கு, *5K, 10K* மற்றும் *Half Marathon*க்கான மெய்நிகர் பதிவு இன்னும் திறந்துள்ளது. ஏதாவது ஒரு சிறப்புப் பகுதியாக இருக்கும் வாய்ப்பை இழக்காதீர்கள்.

பதிவு செய்ய: runsignup.com/tvno

பதிவு நிகழ்வு வீடியோ: *https://www.youtube.com/watch?v=I4bj09y2mdI* இல் பார்க்கவும்

இதயப்பூர்வமான நன்றி:

தமிழ் வெற்றி நடை ஓடை (*TVNO'24*) மாபெரும் வெற்றியடையச் செய்த உங்கள் ஒவ்வொருவருக்கும், குறிப்பாக சன்னிவேல் துணை மேயர் திரு.முரளி சீனிவாசன் மற்றும் சாண்டா கிளாரா கல்வி குழு உறுப்பினர் திருமதி தாரா ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களின் உற்சாகம், மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை இந்த வரலாற்று நிகழ்வை மறக்க முடியாததாக மாற்றியது. எங்கள் ஸ்பான்சர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் சமூகப் பங்காளிகள் தங்களின் அசைக்க முடியாத ஆதரவிற்கு சிறப்பு நன்றி. ஒன்றாக, நாங்கள் உடற்பயிற்சி, சமூகம் மற்றும் சாதனையின் மகிழ்ச்சியை கொண்டாடினோம்.

தமிழ் வெற்றி நடை ஓடை (*TVNO'24*) மாபெரும் வெற்றியடையச் செய்த உங்களின் அயராத அர்ப்பணிப்புக்கும் கடின உழைப்பிற்கும் நாங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் அர்ப்பணிப்பு, உற்சாகம் மற்றும் இடைவிடாத முயற்சி ஆகியவை இந்த நிகழ்வின் முதுகெலும்பாக இருந்தன, எல்லாமே சீராகவும் திறமையாகவும் நடைபெறுவதை உறுதிசெய்தது. உங்கள் பங்களிப்புகள் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன, மேலும் உங்கள் விலைமதிப்பற்ற ஆதரவிற்கு எங்களால் போதுமான நன்றி சொல்ல முடியாது. எதிர்காலத்தில் உங்களுடன் மீண்டும் பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறோம்.

அடுத்த ஆண்டு இன்னும் பெரிய மற்றும் சிறந்த *TVNO'25* க்காக உங்களைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறோம்!

நியூ ஜெர்சி தமிழ்ச்சங்க நிகழ்வுகள்

35ஆம் ஆண்டில் வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கும் நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் முதற்பெரும் கொண்டாட்டமாக, தமிழர் திருநாள் தைப்பொங்கல் திருவிழா பிப்ரவரி 3 ஆம் தேதி சனிக்கிழமை அன்று, குழந்தைகள் முதல்

முதியவர்கள் வரை அனைவரையும் நிகழ்ச்சி முழுவதும் ஆட்டம் போடும் வண்ணம் அமைந்த, நாட்டுப்புறப் பாடல்கள் புகழ் ராஜலட்சுமி, செந்தில் கணேஷ் தம்பதியினர் வழங்கிய கிராமிய இசை நிகழ்ச்சியுடன் கும்மியாட்டம், கிராமிய நடனங்கள், சமையல் போட்டி, அறுசுவை விருந்து என பல கலகலப்பான நிகழ்ச்சிகளுடன் இனிதே துவங்கியது.

நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் வெற்றிகரமான பயணத்திற்கு, அதிகப்படியான தலைமை மற்றும் நிர்வாகப் பொறுப்புகளில் மகளிரின் பங்களிப்பு கூடுதலாக இருப்பதே காரணம். உலகின் ஏனைய அனைத்துத் துறைகளிலும் வெற்றி வாகை

சூடிக்கொண்டிருக்கும் மகளிரைக் கொண்டாடும் விதமாக, மார்ச் 24, 2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற "உலகத் தாய்மொழி நாள் மற்றும் மகளிர்நாள்" சிறப்பு நிகழ்ச்சிக்கு, பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் திரு. வாசு அரங்கநாதன் மற்றும் திரு. ஆழி செந்தில்நாதன் அவர்களின் "தொழில்நுட்பமும் தமிழ் மொழியின் வளர்ச்சியும்" தலைப்பில்

சிறப்புரைகளும் நியூ ஜெர்சியைச் சார்ந்த புகழ்பெற்ற மகளிர் பங்கேற்ற "பூக்களும் முட்களும் - சாதனைப் பெண்கள் கடந்து வந்த பாதை" கலந்துரையாடலும் மேலும் அணி சேர்த்தன.

தாயின் பெருமை உணர்ந்தோர் தாய் மொழியின் பெருமை மறவார். ஒவ்வொரு ஆண்டும் அன்னையர் நாளினை சிறப்பாகக் கொண்டாடும் நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம், மே 12 ஆம் நாள் சனிக்கிழமை அன்று அன்னையைரைப் போற்றவும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் வசந்த காலத்தின் துவக்கமான சித்திரைத் திங்களை வரவேற்கவும் ஏற்பாடு செய்திருந்த, அபிநய நாட்டியப் பள்ளியின் "வசந்தன் வந்தான்" நாட்டிய நாடகமும் சங்கீத கலாநிதி திரு. சஞ்சய் சுப்ரமண்யன்

அவர்களின் "தமிழும் நானும்" தமிழிசைக் கச்சேரியும் ஏறத்தாழ நானூற்றிற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அனைவரையும் இசைக் கதம்பதால் கட்டிப் போட்டது.

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பங்காற்றுவதில் நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் தனிப்பெரும் கவனம் நிலைத்திருப்பதற்கான சான்று, ஒவ்வொரு ஆண்டும் தமிழில் இருமொழி முத்திரை பெற்ற மாணவர்களை

நேரில் அழைத்து, விழா எடுத்து, விருது வழங்கி கொண்டாடுவதே. இவ்வாண்டும், மே 12 ஆம் நாள் அக்கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்று, நாற்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம் வழங்கிய விருதுகளைப் பெற்று மகிழ்ந்தனர்.

"வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலர் மந்திரத்திற்கு உயிர் கொடுக்கும் விதமாக ஜூலை 14 ஆம் நாள் ஏற்பாடு செய்திருந்த சிந்தனை வட்டம் நிகழ்ச்சியில் சமூக நலத்திற்கான பங்களிப்பாக இலவச குருதிக்கொடை மற்றும்

உடல்நலப் பரிசோதனை முகாம்கள் வழியாகவும் காலத்தில் செய்துகொள்ள வேண்டிய உடல்நலப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவ காப்பீடு பற்றிய விழிப்புணர்வுப் பட்டறையின் வழியாகவும் வந்திருந்த பயனர்கள் அனைவருக்கும் பல மதிப்புள்ள தகவல்களை வழங்கியதில் நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம் பேருவகை கொள்கிறது.

தமிழையும் தமிழ்க் கலைகளையும் வளர்க்கும் கலைஞர்களை ஊக்குவித்து அங்கீகாரம் அளித்து கொண்டாடும் வாய்ப்பினை நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம் என்றுமே தவற விட்டதில்லை. அப்படி ஒரு இனிமையான வாய்ப்பை அமைந்தது பன்முகத்திறன் கொண்ட மாற்றுத்திறனாளி கலைஞர் - செல்வி. ஜோதி கலை அவர்களை பாராட்டி கௌரவித்த நிகழ்ச்சி. தனது பாடல்கள் மற்றும் வயலின் இசை மூலம் நெகிழ வைத்தது மட்டுமன்றி, சிறந்த எண்ணமும், குறிக்கோளும், விடாமுயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று உறுதிப்படுத்தி, தன்னுடைய கலகலப்பான பேச்சாலும்,கள்ளமற்ற புன்சிரிப்பாலும் அனைவரையும் கவர்ந்து விட்டார்.

35ஆம் ஆண்டின் விமரிசையான கொண்டாட்டமாக தீபாவளித் திருவிழா அனைவரையும் மகிழ்ச்சிக்கு கடலில் ஆழ்த்துவது திண்ணம். நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் சீரிய பயணம் மென்மேலும் தொடர, வளர, வாழ்த்துங்கள். வாருங்கள் தமிழால் தமிழராய் அனைவரும் இணைவோம் என்றும் வாடா மலராய் மலர்வோம்.

டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் நிகழ்வுகள்

TCTA Unni Krishnan Uthara Concert 2024

உன்னி கிருஷ்ணன் மற்றும் உத்தரா இசை நிகழ்ச்சி மிகுந்த வெற்றியுடன் 06/30 நிறைவுற்றது. 700 க்கும் மேற்பட்ட டுவின்சிடிஸ் பார்வையாளர்களை மயங்க வைத்தது. இந்த இணையின் இசை நிகழ்ச்சி அசாதாரணமானதாக இருந்தது. ஆஜய் கிருஷ்ணன் மற்றும் கீர்த்தனா ஸ்ரீராம் இசை பாணியால் நிகழ்ச்சியை மேலும் சிறப்பித்தனர். முதலில் இருந்து இறுதி வரை நிகழ்ச்சி நிறுத்த முடியாத கொண்டாட்டமாக இருந்தது. மிக வெற்றிகரமான நினைவில் கொள்ளும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்கு மக்கள் தங்கள் பாராட்டினை உளமகிழ்வோடு தெரிவித்தனர்.

TCTA Summer Picnic 2024

டுவின்சிடிஸ் தமிழ் அஸோஸியேஷன் *KODAI* விழா *August 11, 2024* ஞாயிறு அன்று சிறப்பாக நடந்தேறியது. தமிழ்ச் சங்க உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தினரும் திரளாக வந்து விழாவைச் சிறப்பித்தார்கள். பூங்காவில், சைவ மற்றும் அசைவ உணவு விருந்து வழங்கப்பட்டது. ’கூடி உண்போம்’ என்ற வகையில் சைவ மற்றும் அசைவ கூட்டாஞ்சோறு உணவுக்குப் பின், கலந்துரையாடல் நடந்தது. பின்னர், கயிறு இழுக்கும் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். வி ழ ா விற்கு வந்திரு ந்த அ னை வ ரு ம் பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற் பாளர்களாக இருந்தது அனைவரையும் கவர்ந்தது. தமிழ்ச்சங்க உறுப்பினர்களும் , ஊரிலிரு ந்து வந்திருந்த அவர்களின் பெற்றோர்களும் இதை வெகுவாகப் புகழ்ந்தார்கள். தலைவர் மதன் குமார் ராஜேந்திரன் நன்றியுரை வழங்க விழா இனிதாக நடந்தேறியது



கொலராடோ தமிழ்ச் சங்கம்

Tamil Association of Colorado (TAC)

கொலராடோ தமிழ்ச் சங்கம் ஜூன் முதல் செப்டம்பர் வரை நடத்திய நிகழ்வுகளின் சிறு தொகுப்பு:

TAC TALKS – ஜூன் 8 அன்று யூடியூப் பிரபலம் திரு. விஜய் மோகனுடன் கொலராடோ தமிழ்ச் சங்கம் கலந்துரையாடல் நடத்தியது. இந்த நிகழ்வில் பகிரப்பட்ட முக்கிய தலைப்புகள்: விரைவு ஓய்வு, குழந்தைகளின் கல்லூரிக்குத் தேவையான பணம் சேமிப்பு, வரி சேமிப்பு, நாம் பொதுவாக செய்யும் நிதி தவறுகள். டென்வரில் நடந்த இந்த நிகழ்ச்சியில் 90க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சதுரங்கப் போட்டி- ஜூன் 15 அன்று, TAC தனது முதல் செஸ் போட்டியை நடத்தியது. இந்தப் போட்டியில் 40 வீரர்கள் கலந்து கொண்டனர்; சில வீரர்கள் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள். மொத்தம் 4 பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன. போட்டியில் 4 சுற்றுகள் இருந்தன, ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு வீரரும் போட்டியிட்டனர். ஒட்டுமொத்த வெற்றி மற்றும் தோல்விகளின் அடிப்படையில் வீரர்களின் நிலைகள் கணக்கிடப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட மற்ற வீரர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கைப்பந்து போட்டி - ஆகஸ்ட் 11 மற்றும் 18 அன்று, TAC தனது முதல் கைப்பந்து போட்டியை உள்ளரங்கத்தில் நடத்தியது. ஆண்கள், பெண்கள், மற்றும் குழந்தைகள் உட்பட அனைத்துப் பிரிவுகளுக்கான கைப்பந்து போட்டியை நடத்தியது. இந்தப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். வெற்றியாளர்களுக்கு கோப்பைகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. கொலராடோவில் இந்தியப் பெண்களுக்கு கைப்பந்து நடத்தியது இதுவே முதன் முறையாகும்.

கோடைக் கொண்டாட்டம் - கொலராடோ தமிழ்ச்சங்கத்தின் "கோடைக் கொண்டாட்டம்" செப்டம்பர் 7, அன்று சிவிக் கிரீன் பூங்காவில் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

குழந்தைகளுக்கான உண்டி கோல் மற்றும் பட்டம் விடுதல் போன்ற பாரம்பரிய செயல்பாடுகளை நாங்கள் செய்தோம். குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான போட்டோ ஸ்கேவெஞ்சர் ஹண்ட், 4 கார்னர்ஸ், போன்ற விளையாட்டுகளை நாங்கள் சந்தோஷமாக விளையாடி மகிழ்ந்தோம். முதலில் வந்த மூன்று வீரர்கள் பரிசுகளை வென்றனர். 1-5 வயதுள்ள குழந்தைகள் அவர்கள் கண்களை மூடிய நிலையில் அவர்களின் அம்மாவை சரியாக கண்டுபிடிக்க நாங்கள் ஒரு சுவாரஸ்யமான விளையாட்டையும் வைத்திருந்தோம். குழந்தைகள் TAC வழங்கிய நீர் துப்பாக்கிகளுடன் பூங்காவில் உள்ள நீரூற்றுகளில் விளையாடி மகிழ்ந்தனர். ■

சியாட்டல் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள் - 2024

1. தமிழ்ப் பள்ளி துவக்க விழா

இந்த வருடம் சியாட்டல் தமிழ்ச் சங்கத்தின் நீண்ட நாள் கனவு ஒன்று மெய்ப்பட்டது. ஆம், சியாட்டல் தமிழ்ப் பள்ளி லேக் ஸ்டீவன்ஸில் செப்டம்பர் திங்கள் 7ம் நாள் கோலாகலமாக துவக்கப்பட்டது. இது சியாட்டல் தமிழ்ச் சங்கத்தின் ஒரு அங்கம். விழாவிற்கு சியாட்டல் தமிழ்ச் சங்கத்தின் மேனாள் தலைவர்கள் முன்னின்று சிறப்புற நடத்தித் தந்தனர். விழாவினை சிறப்பித்த விருந்தினர்களுக்கும், கனவு மெய்ப்பட ஆதரவளித்த பெற்றோர்களுக்கும், அயராது உழைக்கும் தன்னார்வலர்களுக்கும் பள்ளியின் முதல்வர் நன்றி தெரிவித்தார்! இந்த பள்ளி வாஷிங்டன் மாகாணத்தில் மேலும் பல கிளைப் பள்ளிகள் தொடங்கி ஆலமரமாய் தழைத்திட செயற்குழுவிற்கு வாழ்த்துகள்!

2. விண்வெளி விஞ்ஞானியுடன் ஒரு சந்திப்பு

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் மேனாள் இயக்குனரும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவருமான திரு. மயில்சாமி அண்ணாதுரை அவர்களுடனான சந்திப்பு செப்டம்பர் திங்கள் 4ம் நாள் நடைபெற்றது. இதில் சியாட்டல் தமிழ்ச் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு விண்வெளி அறிவியலில் நமது பங்களிப்பு, நமது நாட்டின்



சாதனைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சி குறித்து ஐயாவுடன் விவாதித்தோம். ஐயா அவர்கள் "என் பார்வையில் விண்வெளி ஆராய்ச்சி அன்றும் இன்றும்" என்று விவரித்தது, சந்திப்பின் முத்தாய்ப்பாக அமைந்தது. தமிழ்ச் சங்க நிர்வாகிகள் பொன்னாடை, பூங்கொத்து உடன் நினைவுப்பரிசாக தமிழ் நூல் அளித்தனர். அருடைய சாதனைகளுக்கு பக்கபலமாக இருந்த அவருடைய துணைவியாரையும் சிறப்பித்தனர்.

3. பந்தல் 2024

திறந்தவெளி பூங்காவில் ஒரு தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டுத் திருவிழா. ஆகஸ்ட் திங்கள் 18ம் நாள் அன்று ஸ்னொஹாமிஷ் வில்லிஸ் டக்கர் பூங்காவில் இனிதே தொடங்கியது. பலவித விளையாட்டுக்களில் உற்சாகத்துடன் பங்கு கொள்ள 300க்கும் மேற்பட்ட மக்கள், தத்தம் குழந்தைகளுடன் விழாவுக்கு வந்து சிறப்பித்தனர். ஆடவர்களுக்கு சதுரங்கம், கேரம்போர்டு,



கைப்பந்து, ரிங்பால், எறிபந்து, டென்னிஸ், இறகுபந்து போன்ற போட்டிகளும், குழந்தைகளுக்கு சதுரங்கம், கேரம்போர்டு, ஓட்டம், சாக்கு போட்டி, கயிறு இழுத்தல், பம்பரம், கில்லி தாண்டு போன்ற போட்டிகளும் நடைபெற்றன. போட்டியில் கலந்து கொண்ட எல்லா வீரர்களுக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு ஐயா APJ அப்துல் கலாம் சுழல் கோப்பை வழங்கப்பட்டது. தன்னார்வலர்கள் சுவையான உணவினை மக்களுக்கு வினியோகித்தனர்.

4. வாழை இலை விருந்து 2024

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஆண்டுதோறும் “வாழை இலை விருந்து” விமரிசையாக நடைபெறும். இம்முறையும் 500க்கும் மேற்பட்டோருக்குத் தமிழர் பண்பாட்டின் விருந்தோம்பல் சிறப்பை வாழை இலை போட்டு , 24 வகை சுவையான உணவுகளைக் கேட்டுக் கேட்டு பரிமாறி அவர்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்த பெரும்பேற்றைப் பெற்றோம். சிறார்களும், இளைஞர்களும் எங்களோடு சேர்ந்து வேலை செய்ததைக் கண்ட போது, நமது கடமையினை நாம் சரிவரச் செய்கிறோம் என்ற பெரும் மன நிறைவைக் கொண்டோம். அதே சமயம் இது போன்ற நிகழ்வகள் உணவு வீணடிக்கப்படுவதை குறைப்பது எப்படி?, நெகிழிப் பொருட்கள் புழக்கத்தை குறைப்பது எப்படி? போன்ற சிக்கல்களுக்கு விடை தேடவும் எம்மை முடுக்கி விடுகின்றன என்று சொன்னால் மிகையாகாது.

5. தமிழர் திருநாள் 2024

சியாட்டல் தமிழ்ச்சங்கத்தின் நிகழ்ச்சிகளில் தலையாயது தமிழர் திருநாள் நிகழ்ச்சி. மொத்த நிகழ்வும் தமிழ் மற்றும் தமிழரின் வாழ்வியலை ஒட்டியே வடிவமைக்கப்பட்டிருந்தன. அரங்கத்தின் நுழைவு வாயிலருகில் இருந்த தோரண, அரங்க அமைவுகள் யாவும், ஊரில் குடும்பத்துடன் பொங்கல் கொண்டாடும் நினைவை மீட்டும் விதமாக அமைக்கப்பட்டிருந்தன. பொங்கலுக்கு முத்தாய்ப்பாக, சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் பங்குபெற்ற பல்வேறு தமிழ்ப்போட்டிகள் இரு வாரங்களுக்கு முன்பே நடத்தி முடிக்கப்பட்டன.

விழாவிற்கு மகுடமாக, தமிழறிஞர் மகுடேசுவரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, “அயலக வாழ்வில் தமிழ்” என்ற தலைப்பில் ஒரு சிறப்பான உரையை வழங்கியதோடு மட்டுமல்லாது, தமிழ்ப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார். அரங்கேறிய ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளாக வகைப்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. விழா சர்க்கரைப் பொங்கலாய் தித்தித்து என்று சொன்னால் அது மிகையாகாது.

எழுத்தாளர் அறிமுகம்

ராம்பிரசாத் , ramprasath.ram@gmail.com தமிழக அரசின் விருது பெற்ற எழுத்தாளர் ஆவார். கணினியில் பொறியியல் பட்டமும், வணிக நிர்வாகத்தில் முது நிலைப் பட்டமும் பெற்றவர்.

மயிலாடுதுறையைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் 2014லிருந்து கணினி மென்பொருள் துறையில் அமெரிக்காவில் பணியில் இருக்கிறார். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் புனைவுகள் எழுதி வருகிறார். தமிழ் இலக்கிய உலகில் கணிதப்புனைவுகள், அறிவியல் புனைவுகளுக்காக அறியப்படுபவர். 2009லிருந்து தீவிரமாக எழுதிக்கொண்டிருக்கிறார்.

தமிழில் ஆனந்த விகடன், கணையாழி, குமுதம், குங்குமம், ராணி, ராணிமுத்து, பாக்யா, தேவியின் கண்மணி ஆகிய அச்சு இதழ்களில் இவரது கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆங்கிலத்தில் *Aphelion SF&F, Metastellar, L. Ron Hubbard Writer's of the future Contest, Alternate Reality, Literary Yard, Readomania, Boston Literary Magazine, Madswirl, QuailBell Magazine,* ஆகிய தளங்களில் இவரது சிறுகதைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

தமிழ்/இந்திய விருதுகள்/அங்கீகாரங்கள்:

1. 2020ல் வெளியான இவரது 'வாவ் சிக்னல்' விஞ்ஞானப் புனைவுச் சிறுகதைகள் தொகுதி நூலுக்கு தமிழக அரசு, தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த சிறுகதை நூல் விருது அளித்து கௌரவித்திருக்கிறது.
2. இவரது 'சோஃபியா' சிறுகதை 2022ம் ஆண்டுக்கான ஜீரோ டிகிரி இலக்கிய விருது பெற்றிருக்கிறது,
3. குவிகம் சிறுகதைப் போட்டியில் இவரது 'கண்ணாடிச்சுவர்' சிறுகதை தேர்வாகி தொகுப்பானது.
4. கதிர்ஸ் தமிழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'எப்போதும் பெண்' சிறுகதை தேர்வாகி தொகுப்பானது.
5. இவரது 'தழுவு கருவி' சிறுகதை அரூ அறிவியல் புனைவிலக்கிய சிறுகதைப் போட்டியில் தேர்வாகி தொகுப்பானது.
6. இவரது 'சோஃபி' சிறுகதை எஸ்.சங்கர நாராயணன் தொகுத்து வெளியிட்ட 'மாசறு பொன்' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றது.
7. இவரது சிறுகதை விஸ்வசேது இலக்கிய பாலம் (2011) வெளியிட்ட உலகலாவிய சிறுகதைப் போட்டியில் தேர்வான சிறுகதைகளில் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
8. 2022ம் ஆண்டு இவர் பொறியியல் பயின்ற ஜெரூசலேம் பொறியியல் கல்லூரி இவரது இலக்கிய பணிகளை கருத்தில் கொண்டு 'Distinguished Alumni Award' விருது வழங்கி சிறப்பித்திருக்கிறது.
9. வ.ந.கிரிதரன் நடத்திய பதிவுகள் தளத்தில் வெளியான இவரது இரண்டு சிறுகதைகள், பதிவுகள் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.
10. காலாக்ஸி பதிப்பகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'போர்' சிறுகதை தேர்வாகி தொகுப்பில் இடம்பெற்றது.
11. மதுரையைச் சேர்ந்த அதிதி தொண்டு நிறுவனம் 2011 குடியரசு தினத்தையொட்டி நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை தேர்வாகியிருக்கிறது.

ஆங்கில/அமெரிக்க விருதுகள்/அங்கீகாரங்கள்:

1. *L. Ron Hubbard, Writers of the Future, has honored his work with an 'Honorable Mention.' in its 41st International Writers of the Future Contest.*

மினசோட்டாத் தமிழ்ச்சங்கக் கலை நிகழ்ச்சி

தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சிகாகோவில் உள்ள ரோஸ்மாண்ட் அரங்கில், கடந்த செப்டம்பர் 7ஆம் நாள் அயலகத் தமிழர் களுக்கான கலை விழாவில் தலைமை ஏற்றார். அவ்விழாவிற்கு பல்வேறு தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த பலர் தங்கள் குடும்பத் துடன் வந்திருந்தனர். மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் சார்பாக, கலை நிகழ்ச்சியை மேடையேற்ற, கலைக்குழுவினருடன் சுமார் 100 நபர்களுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். மினசோட்டாத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு,செந்தில்குமார் கலியபெருமாள் “தமிழரின் ஆடற்கலைகள்” என்ற தலைப்பில் கலைக் குழுவினரை ஒருங்கிணைத்திருந்தார்.

தமிழர்கலைகளை, எந்தவித வேறுபாடிமில்லாமல் கற்றவர்கள், பறையும் பரதமும் -செவ்வியல் ஒற்றுமையுடன் நாட்டடைவு, சருக்கல் அடைவு, மீட்டடைவு, மண்டி அடைவு ஆடினர். தவில் நாயனத்துடன் நையாண்டி மேளத்திற்கு, கரகத்தை தலையில் கட்டாமல் ஆடும் கரகாட்டம். பறையாட்டத்துடன், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மற்றும் புலி ஆட்டம் என பல்வேறு தமிழர் ஆடற்கலைகளை முதல்வர் முன்னிலையில் மேடையேற்றியது. மினசோட்டத் தமிழ்ச்சங்க ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்ததாக கலந்து கொண்ட அனைவரின் பாராட்டையும் பெற்றது.

மினசோட்டாத் தமிழ்ச்சங்கம், மினசோட்டாத் தமிழ்ப் பள்ளி தன்னார்வலர்கள் தயாரித்த தமிழரின் வரலாற்றுக் காலவரிசைப் புத்தகத்தை தமிழக முதல்வருக்கு மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்தலைவர் பரிசளித்தார்.

■

கேரொலினா தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள்

அம்மா என்பது அன்பின் இலக்கணம். அத்தகைய தாய்மையை பாராட்டும் வண்ணம் கேரொலினா தமிழ் சங்கம், மே 19/2024 அன்று "அன்னையர் தினம்" நிகழ்ச்சியை கோலாகலமாக கொண்டாடியது. நிகழ்ச்சி மதியம் 1 மணிக்கு தொடங்கி மாலை 6:30 மணிக்கு முடிந்தது. மக்கள் தேனீக்கள் போல கூடி வந்தனர். அற்புதமான உணவுகளுடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பாடல், நடனம், புதிர் தீர்த்தல் போன்ற பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். மகிழ்ச்சியால் மக்கள் திக்குமுக்காடிப் போனார்கள்.



கோடை குழந்தைகளுக்கானது மட்டுமல்ல, ஆண்களுக்கும் கூட. கேரொலினா தமிழ் சங்கம், ஜூன் 08, 2024 அன்று, " கைப்பந்து போட்டி"யை நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து அணிகளும் நன்றாக விளையாடினர். வெற்றியை விட வெற்றிக்கான பாதையை நோக்கி நடப்பதே வெற்றி என்பதை போட்டியாளர்களிடம் தெரிந்து கொண்டோம். நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு தொடங்கி இரவு 8.30 மணிக்கு முடிந்தது.

கடமையின் இலக்கணம் தந்தை. அத்தகைய தந்தைகளின் பெருமையை பறைசாற்றும் விதத்தில் கேரொலினா தமிழ் சங்கம், ஜூன் 29, 2024 அன்று, "தந்தையர் தினம்" நிகழ்ச்சியை கொண்டாடியது. நிகழ்ச்சி பிற்பகல் 1 மணிக்கு தொடங்கி மாலை 4:30 மணிக்கு முடிந்தது. அதிக வெப்ப அறிக்கை வந்திருந்த போதிலும், பெரிய கூட்டத்தை கண்டோம். முதன் முதலாக நேரலையில் நாங்கள் கிரிக்கெட் ஒளிபரப்பினோம், அன்று இந்தியா உலகக் கோப்பையை வென்றது. எங்கள் நிகழ்ச்சியும் மிகுந்த வெற்றி பெற்றது.

கோடை வெப்பத்தைத் தணிக்க, கேரொலினா தமிழ் சங்கம், ஜூலை 13, 2024 அன்று, "கோடை விழா" நிகழ்ச்சியை நடத்தியது. மூன்று பிரபலங்கள் வந்து நிகழ்ச்சியை பிரகாசித்தனர். சவுண்ட் மணியின் இசை, ஜோதியின் திருக்குறள் மற்றும் பாட்டு, ஆவுடையப்பன் விவாத மேடை நிகழ்ச்சி ஆகியவை கூட்டத்தைக் கட்டிப்போட்டன. கோடையின் பிடியில் சிக்கித் தவித்த மக்களுக்கு குளு குளு ஐஸ்கிரீம் சாப்பிட்டதை போல் ஒரு உணர்வை இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியது.

"கதை கேளு கதை கேளு" என்ற கதை சொல்லும் நிகழ்ச்சி ஒவ்வொரு இரண்டாவது வெள்ளியன்று (மாதம் இருமுறை) நடந்து வருகிறது. இது குழந்தைகளின் பேச்சு திறன், படைப்புத் திறன் மற்றும் நல்லொழுக்கங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கதைகள் மேற்கூறிய அனைத்தையும் கடத்தும் ஒரு பயனுள்ள வழியாகும். 3 முதல் 13 வயது வரையிலான குழந்தைகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர் மற்றும் கதைகளை ரசித்தனர்."

செவுக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பது போல சில கேளிக்கை படங்களான இந்தியன் 2 (ஜூலை 20, 2024) மற்றும் ராயன் (ஆகஸ்ட் 6, 2024) நிதி திரட்டும் நிகழ்ச்சியாக சலுகை விலையில் மக்களுக்கு காண்பிக்கப்பட்டது.

அயலகத் தமிழர் நாள் விழா!

அமெரிக்காவில் சிகாகோ நகரில் செப்டம்பர் 7-ம் தேதி நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலினுக்கு பலத்த ஆரவாரத்துடனும், மகிழ்ச்சியுடனும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த விழாவை அயலகத் தமிழர் நலத் துறையுடன் இணைந்து தமிழ்நாடு அறக்கட்டளையும் சிகாகோ தமிழ்ச் சங்கமும் ஒருங்கிணைத்து இருந்தனர்.

மிசௌரி தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் மேடையில் துடும்பாட்டத்தையும் மரபிசையையும் முதல்வரின் முன்னிலையில் வெகுசிறப்பாக நிகழ்த்திக் காட்டினர். ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்தனர்.

மிசௌரி தமிழ்ச் சங்கமும் தமிழ்ப் பள்ளியும் இணைந்து தொடங்கிய “தமிழ்ப்பள்ளி மற்றும் தமிழ்ப் பண்பாட்டு மையம்” திட்டவரைவானது மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களால் விழா மேடையில் வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டுக்கு குடும்பத்துடன் வருகை தந்து, குமரியில் திருவள்ளுவர் சிலை, கீழடி, கொற்கை, பொருநை உள்ளிட்ட இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். தமிழர்களின் பண்டைய நாகரீக வாழ்க்கைச் சிறப்புகளை அறியச் செய்யுங்கள் நம்முடைய உறவினரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் முதலமைச்சராக இருக்கிறார் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள் என்று அமெரிக்கத் தமிழர்களுக்கு மூன்று முக்கிய கோரிக்கைகளை விடுத்தார்..

அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் தமிழர்கள் பெருவாரியாக வந்து கலந்து கொண்ட இந்த விழாவில், 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் இரவு உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழா பெரும் கொண்டாட்டத்துடன் மகிழ்வுடன் நிறைவு பெற்றது. நாம் அனைவரும் இரவு 1 மணியளவில் வீடு திரும்பினோம் அதே உற்சாகமான கொண்டாட்ட மனதுடன்! வாழ்நாள் முழுவதற்குமான நினைவுகளுடன்!

Federation of Tamil Sangams
North America
SINCE 1988
கெரொலைனா தமிழ்ச் சங்கம்
1989
வாழ்க தமிழ்
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும்,
கெரொலைனா தமிழ்ச்சங்கமும் (Raleigh, NC)
இணைந்து நடத்தும்
38வது
பேரவைத்
தமிழ் விழா 2025
ஜுலை 3,4 & 5, 2025
FETNA 38TH
TAMIL CONVENTION -2025
(RALEIGH, NC)
JULY 3, 4 & 5, 2025